2026 மார்ச் மாதம் 17- ஆம் தேதி செவ்வாய்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 131/2025

2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17- ஆம் தேதி செவ்வாய்கிழமை திருமதி.T.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW2 (LW2 )- சுதா |
| கணவர் பெயர்: | சுந்தர் |
| ஊர்: | அனுமந்தன்பட்டி |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | கூலிவேலை |
| வயது : | 50 |

17.03.2026

(2, 3, எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS -ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை**:-

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, அனுமந்தன்பட்டியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது தாயார் ஆவார். எதிரிகளை எனக்கு தெரியும். எதிரிகள் எங்கள் வீட்டின் அருகில் வசித்து வருகிறார்கள். எனது தாயார் அ.சா.1, எனது தம்பி ஈஸ்வரன், இறந்துபோன எனது தந்தை முத்துமாயன் ஆகியோர்கள் காமையக்கவுண்டன்பட்டியில் குடியிருந்து வந்தார்கள். கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பாக எதிரிகள்

அனுமந்தன்பட்டியில் உள்ள எங்களது 4 செண்ட் நிலத்தை வாங்கினார்கள். பள்ளமாக இருந்த நிலத்தை கழித்துவிட்டு மீதி 4 செண்ட் நிலத்தை வாங்கினார்கள்.

2. பள்ளமாக உள்ள நிலத்தையும் வேண்டும் என்று பின்னர் எங்களிடம் கேட்டு பிரச்சனை செய்து வந்தார்கள். அடிக்கடி சண்டை ஏற்படுத்தி வந்தார்கள். அதனால் வாக்குவாதம் ஏற்பட்டது. பிரச்சனை தொடர்ந்து கொண்டே இருந்ததால் ஊருக்குள் இருந்த பெரியோர்களை வைத்து பேசினோம். பெரியோர்கள் தொகையை கொடுத்து மீதமுள்ள இடத்தையும் முடித்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்கள், ஆனால் எதிரிகள் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. கருணாநிதி, பால்ச்சாமி, ரமணி, ராசு ஆகியோர்களை வைத்து பேச்சுவார்த்தை நடைபெற்றது.

3. கொலை நடந்த 4 நாட்களுக்கு முன்பு 1வது எதிரி பார்த்திபன் இராணுவத்திலிருந்து வந்து, அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வந்து வாசலில் நின்றுக்கொண்டு தகராறு செய்து வந்தார். இரவு நேரங்களில் வந்து அசிங்கமாக பேசி தகராறு செய்து வந்தார், பகல் நேரங்களில் வரவில்லை. 01.05.2025 ம் தேதி இரவு 9.00 மணியளவில் நாங்கள் தூங்கிக்கொண்டிருந்தோம். அதன்பின்னிட்டு இரவு 9.30 மணிக்குமேல் 1வது எதிரி பார்த்திபன் வந்து, எங்கள் வீட்டை ஒட்டியுள்ள தகர ஷீட்டுக்களை அடித்து நீங்கள் ஆம்பளைகளா, வெளியே வாங்கடா, தேவுடியா மகனே என்று சொல்லி மிகவும் அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்.

4. அப்போது எனது கணவர் சுந்தர் வெளியில் இரவு நேரங்களில் வந்து ஏன் அசிங்கமாக பேசி தகராறு செய்கிறாய் என்று 1வது எதிரி பார்த்திபனிடம் கேட்டார். எனது கணவர் சுந்தர் அதே தெருவில் வசித்து வரும் தர்மர் மகன் ராஜேந்திரனை அழைத்து வரச் சென்றார். ராஜேந்திரனை அழைத்து வந்து, 1ம் எதிரி பார்த்திபனிடம் இரவு நேரங்களில் ஏன் தகராறு செய்கிறாய் என்று

கேட்கும்படி கூறினார், பகல் நேரங்களில் பிரச்சனையை பேசிக்கொள்ளலாம் என்று ராஜேந்திரன் கூறினார். ராஜேந்திரன் எதிரிகளின் வீட்டிற்கு சென்று, ஏன் பகலில் பேசிக்கொள்ளலாமே, இரவு நேரங்களில் ஏன் வீண்தகராறு செய்கிறாய் என்று கேட்டார்.

5. பேசிக்கொண்டிருந்தப்போதே 1வது எதிரி பார்த்திபன் எங்கள் வீட்டின் முன்பு வந்து, ஏன்டா தேவுடியா மகனே ஆட்களை அழைத்து வந்து பேசும் அளவிற்கு நீ பெரிய ஆளா என்று திட்டி எனது கணவர் சுந்தரை நெஞ்சில் காலால் எட்டி உதைத்து கீழே தள்ளிவிட்டார். 3வது எதிரி விஜயாவிடம் 1வது எதிரி பார்த்திபன் கம்பை எடுத்து வந்து அடித்தால் தான் சரிவரும் என்று கூறிக்கொண்டே கம்பை எடுத்துவந்து, எனது கணவர் சுந்தரை சவுக்கு கட்டையை எடுத்து வந்து அடித்தார். அதனால் எனது கணவருக்கு முகத்திலும், உதட்டிலும் காயங்கள் ஏற்பட்டன.

6. 2வது ராஜேந்திரன் ரீப்பர் கட்டையால் எனது கணவர் சுந்தரை அடிக்க வந்தார். 3வது எதிரி விஜயா அடிபைப் மற்றும் இரும்பு கம்பியை எடுத்து வந்தார். 1வது எதிரி எனது கணவரை அடித்துக்கொண்டிருந்த போது, நானும், எனது தந்தை முத்துமாயனும் விலக்கிவிட சென்றப்போது, 3வது எதிரி விஜயா அடிபைப்பை எடுத்துவந்து, எனது தந்தை முத்துமாயனை முதுகிலும், உடம்பிலும் மாறி மாறி அடித்தார், 2 வது எதிரி ராஜேந்திரன் என்னை தலை, கழுத்து, கன்னம் போன்ற இடங்களில் ரீப்பர் கட்டையால் மாறி மாறி அடித்ததால் எனக்கு முன்னந்தலையில் இரத்தக்காயமும், கழுத்தில் ஊமைக்காயம், வலது கன்னம், இடது தோள்பட்டை போன்ற இடங்களில் பலதரப்பட்ட காயங்கள் ஏற்பட்டன.

7. விஜயாவும், ராஜேந்திரனும் சேர்ந்து எனது தந்தை முத்துமாயனை அடித்தார்கள். அதனால் எனது தந்தை கீழே விழுந்துவிட்டார். 3வது எதிரி அரிவாளை கொண்டு வாடா, அறுத்தால் தான் இவர்கள் சும்மா இருப்பார்கள் என்று சொன்னவுடன், பார்த்திபன் அரிவாளை எடுக்க சென்றப்போது, கீழே

இருந்த தெருவில் பதிக்கும் ஹாலோபிளாக் கல்லை எடுத்து எனது தந்தையின் தலையில் மடார் என்று போட்டுவிட்டார். பின்னர் பார்த்திபன் வீட்டிற்குள் சென்று பட்டாக்கத்தியை எடுத்து வந்து, எனது கணவர் சுந்தரின் தலையில் மாறி மாறி 4, 5 முறை வெட்டினார். வெட்டும்போது 2 வது எதிரி ராஜேந்திரன் சுந்தரின் வாயை பொத்திவிட்டார், வெட்டும்போதே எனது கணவர் கையால் தடுக்க முற்பட்டப்போது, விஜயா அடிபைப்பால் சுந்தரை அடித்ததில் இரண்டு கைகளும் உடைந்து கீழே சாய்ந்துவிட்டது.

8. எனது மகன் ஜெயசூர்யா விலக்கிவிட வந்தார். 1வது எதிரி பார்த்திபன் அப்போது எனது மகனின் வலது காதை கடித்துவிட்டார். அதனால் அவருக்கு காயம் ஏற்பட்டது. கம்பு மற்றும் ரீப்பர் கட்டையை அந்த இடத்திலேயே போட்டுவிட்டு, பட்டாக்கத்தி மற்றும் அடிகுழாய் பைப்பை எடுத்துக்கொண்டு வீட்டிற்குள் வைத்துவிட்டார்கள். எதிரிகள் மூன்று நபர்களும் இருச்சக்கர வாகனங்களில் சென்றுவிட்டார்கள். அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் வந்து, ஆம்புலன்ஸிற்கு தகவல் சொன்னார்கள். ஆம்புலன்ஸ் வந்தவுடன் அதிலிருந்த உதவியாளர் எனது தந்தையை பரிசோதித்துவிட்டு எனது தந்தை இறந்துவிட்டதாக கூறினார்.

9. எனது கணவர் சுந்தருக்கு அதிகமான காயம் ஏற்பட்டு, எனது வீட்டின் வாசல் முன்பு முழுவதும் இரத்தமாக இருந்தது. என்னையும், எனது கணவர் சுந்தரையும் ஆம்புலன்ஸில் ஏற்றி உத்தமபாளையம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு எனது மகன் ஜெயசூர்யாவும் ஆம்புலன்ஸில் வந்தார். அதன்பின்னர் எனது கணவருக்கு வெட்டுக்காயங்கள் அதிகமாக இருந்ததால் தேனி, க.விலக்கு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். எனக்கும், எனது கணவருக்கும் அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. நான் உள்நோயாளியாக 5 நாட்கள் சிகிச்சை பெற்றேன். எனது கணவர் சுந்தர் சிசிக்சை பலனின்றி அன்றைய தினமே நள்ளிரவு 1.30 மணியளவில் இறந்துவிட்டதாக கூறினார்கள்.

10. எனது தாயார் இறந்த எனது தந்தையை தேனி, க.விலக்கு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றுவிட்டதாக கூறினார். எனது தாயார் தவமணியும், எனது மகள் சுபத்ராவும் உத்தமபாளையம் காவல்நிலையம் சென்று எதிரிகள் பார்த்திபன், ராஜேந்திரன் மற்றும் விஜயா ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்க புகார் தெரிவித்துள்ளார்கள். சம்பவத்தின்போது எனது தந்தை நீல வண்ணம் கொண்ட சிறிய கட்டம்போட்ட கைலி கட்டியிருந்தார், சட்டை அணியவில்லை. எனது கணவர் நீலவண்ணம் பெரிய கட்டம்போட்ட கைலியும், வெள்ளை நிற சட்டையும் அணிந்திருந்தார். சம்பவத்திற்கு பின்பு வெள்ளை நிற சட்டை இரத்தம்படிந்ததால் சிவப்பு நிறமாக இருந்தது.

11. என்னிடம் காட்டப்படும் பெரிய கட்டம்போட்ட கைலி எனது கணவர் சம்பவத்தின்போது அணிந்திருந்த கைலி தான். அது சா.பொ.2 ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் சிறிய கட்டம்போட்ட கைலி எனது தந்தை சம்பவத்தின்போது அணிந்திருந்த கைலி தான். அது சா.பொ.1 ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் ஒரு ஜோடி செருப்பு எனது கணவர் சம்பவத்தின்போது அணிந்திருந்த செருப்பு ஆகும். அது சா.பொ.9 குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆரஞ்சு நிற பட்டாப்பட்டி உள்ளாடை எனது தந்தை சம்பவத்தின்போது அணிந்திருந்த உள்ளாடை ஆகும். அது சா.பொ.10 குறியீடு செய்யப்படுகிறது.

12. என்னிடம் காட்டப்படும் நீலநிற பாக்கெட் வைத்த உள்ளாடை எனது கணவர் சம்பவத்தின்போது அணிந்திருந்த உள்ளாடை ஆகும். அது சா.பொ.11 குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் காப்பிக்கலர் பனியன் எனது கணவர் சம்பவத்தின்போது அணிந்திருந்த பனியன் ஆகும். அது சா.பொ.12 குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் இரத்தம்படிந்த வெள்ளை நிற சட்டை எனது கணவர் சம்பவத்தின்போது அணிந்திருந்த சட்டை ஆகும். அது சா.பொ.3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் பட்டாக்கத்தி 1வது எதிரி பார்த்திபன் எனது கணவர் சுந்தரை தாக்கியப்போது பயன்படுத்திய பட்டாகத்தியாகும், அது சா.பொ.5 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

13. என்னிடம் காட்டப்படும் அடிகுழாய் பைப் 3வது எதிரி விஜயா எனது கணவரையும், எனது தந்தையையும் தாக்கியப்போது பயன்படுத்திய குழாயாகும், அது சா.பொ.4 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் கட்டை மற்றும் ரீப்பர் கட்டை 1 மற்றும் 2வது எதிரிகள் எனது கணவர், எனது தந்தை மற்றும் என்னைத் தாக்கியப்போது பயன்படுத்திய கட்டை மற்றம் ரீப்பர் கட்டையாகும், அது சா.பொ.6 மற்றும் சா.பொ.7 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளன. என்னிடம் காட்டப்படும் ஹாலோபிளாக் கல்லைக் கொண்டு 1வது எதிரி பார்த்திபன் எனது தந்தையின் தலையில் மீது வீசிய கல்லாகும். அது சா.பொ.8 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது, இந்த ஹாலோபிளாக் கல் எதிரியின் வீட்டின் முன்பு ரோட்டில் பதித்திருந்த கல்லாகும். எனது கணவர் எனது தாயாரின் உடன்பிறந்த தம்பியாவார். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

14. என்னை உத்தமபாளையம், நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நீதித்துறை நடுவர் என்னை விசாரித்தார். நடந்த சம்பவம் குறித்து நீதிபதியிடம் சொன்னேன். அதை பதிவு செய்துக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் 183 BNSS –ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 17.03.2026 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI Digitally signed by G SREE DEVI Date: 2026.03.17 17:11:46 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.

17.03.2026